## திருப்பாவை – பொருள் - எளிய தமிழ் கவிதை வடிவில்...

# ஆண்டாள் அருளிய திருப்பாவை - பொருள்
# எளிய தமிழ் கவிதை வடிவில்...

### கவியாக்கம்: ஸ்ரீதேவிபிரசாத் (2022)

ஆண்டாள் அளித்த திருப்பாவை - பைந்தமிழில் இருந்தாலும், நம்முள் பலருக்கும் முழுதான பொருள் புரிவதில்லை. எனது இந்த சிறு முயற்சியின் நோக்கம், அந்த பாடலின் நேரடியான மற்றும் எளிய பொருளினை எல்லோரும் புரிந்துகொள்ள ஏதுவாய் கவிதை வடிவிலேயே சொல்வதுதான். கவி நடையை படித்து ரசிப்பவர்களுக்கு இந்த படைப்பு பயனுள்ளதாக அமையும் என நம்புகிறேன்.

ஆண்டாளின் தமிழ் மற்றும் சந்தத்தை ரசிக்க, திருப்பாவை பாசுரத்தை படித்தால்தான் அனுபவிக்க முடியும். மேலும், அதற்கான பொருள் விளக்கமும், உரைகளும் நிறைய உள்ளன. அவற்றில், பாசுரத்தில் மறைமுகமாய் சொல்லப்படும் பொருளும், வேறு கோண பார்வைகளும் அறிந்து கொள்ளலாம். தமிழார்வம் கொண்டோர்கள் நல்ல உரைநடை விளக்கங்களையும் படிக்கவும்.

ஓம் நமோ நாராயணா !

PSDPRASAD

# திருப்பாவை – பொருள் - எளிய தமிழ் கவிதை வடிவில்...

1)

மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்;
நீராடப் போதுவீர்! போதுமினோ, நேரிழையீர்!
சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்!
கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன்,
ஏரார்ந்த கண்ணி யசோதை இளஞ்சிங்கம்,
கார்மேனிச் செங்கண் கதிர்மதியம்
போல்முகத்தான்
நாரா யணனே, நமக்கே பறைதருவான்,
பாரோர் புகழப் படிந்தேலோ ரெம்பாவாய். (1)

மார்கழியின் பௌர்ணமியில்
  நீராட  வாருங்கள் !
சீர்மிகுந்த ஆயர்பாடி
  செல்விகளே ! சிறுமியரே !
கூரான வேல்கொண்டு
  நமையெல்லாம் காக்கின்ற
பேராளன் நந்தகோபன்
  கூர்விழியாள் யசோதை
சிங்கமகன் செங்கண்ணன்
  கார்மேனி கொண்டவனாம்
மங்கலமாய் சூரியன்போல்
  மிளிர்கின்ற முகத்தவனாம்
கண்ணபிரான் நமக்கெல்லாம்
  அருளிடவே இருக்கின்றான் !
இன்பமுடன் அவன்பெருமை
  நாமெல்லாம் பாடிடவே
இவ்வுலகே வாழ்த்திடுமே !
  வாருங்கள் ! பாடிடுவோம் !

PSDPRASAD

2)

வையத்து வாழ்வீர்காள்! நாமும் நம்பாவைக்குச்
செய்யுங் கிரிசைகள் கேளீரோ! பாற்கடலுள்
பையத் துயின்ற பரமன் அடிபாடி,
நெய்யுண்ணோம்; பாலுண்ணோம்; நாட்காலை
நீராடி
மையிட் டெழுதோம்; மலரிட்டு நாம் முடியோம்;
செய்யா தனசெய்யோம்; தீக்குறளைச்
சென்றோதோம்;
ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி
உய்யுமா றெண்ணி உகந்தேலோ ரெம்பாவாய். (2)

பாற்கடலில் துயில்கின்ற
பரந்தாமன் புகழ்பாடி
பொற்பாதம் சேர்ந்திடவே
செய்கின்ற நோன்பிற்கு
நெறிமுறைகள் கேளீரோ
எங்குலத்து செல்வியரே !
நெய் உண்ணக் கூடாது !
பால் உண்ணக் கூடாது !
மையிடவும் கூடாது !
மலர்சூடக் கூடாது !
தீயவைகள் கூடாது !
தீஞ்சொற்கள் கூடாது !
தூயவராம் துறவியர்க்கும்
பொருளில்லா பேருக்கும்
தாராள தர்மங்கள்
ஏராளம் செய்திடணும் !
நீராடி சீக்கிரமே
நாள்கழிக்க வேணுமம்மா !



PSDPRASAD

3)

ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள் நம் பாவைக்குச் சாற்றிநீர் ஆடினால்,
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள்மும் மாரிபெய்து
ஓங்கு பெருஞ்செந்நெ லூடு கயல் உகளப்
பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்ப,
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி
வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோ ரெம்பாவாய். (3)

மூவடியில் உலகளந்த
உத்தமனாம் நாரணனின்
பூவடியின் பெருமையினை
பாடியேநாம் பாவைக்கு
பூவாரம் சூடிடும்முன்
நீராடி வந்திடுவோம் !

சீரான விரதமிதன்
சிறப்பான பலன்றிவோம் !
நோன்பிதனை செய்வதனால்
நாடெல்லாம் மாதத்தில்
மூன்றுமுறை மழைபெய்யும் !
மழையதனால் நெல்செழிக்கும் !
குவளைமலர் பூத்திருக்கும் !
பொன்வண்டு மொய்த்திருக்கும் !
கறவைப்பசு வள்ளலென
பாற்குடங்கள் நிரப்பிவிடும் !
வற்றாத செல்வமெலாம்
விரதத்தால் சேர்ந்துவிடும் !

PSDPRASAD

4)

ஆழி மழைக்கண்ணா! ஒன்று நீ கைகரவேல்
ஆழியுள் புக்கு முகந்துகொ டார்த்தேறி,
ஊழி முதல்வன் உருவம்போல் மெய்கறுத்து
பாழியந் தோளுடைப் பற்பநா பன்கையில்
ஆழிபோல் மின்னி, வலம்புரிபோல் நின்றதிர்ந்து,
தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழைபோல்
வாழ உலகினில் பெய்திடாய், நாங்களும்
மார்கழி நீராட மகிழ்ந்தேலோ ரெம்பாவாய். (4)

மேகத்தின் அதிபதியே !
சொல்லுவதைக் கேளாயோ?
தாகத்தில் கடல்நீரை
முழுவதுமாய் நீஉறிஞ்சி
உலகத்தின் முதலவனாம்
கண்ணன்போல் கருப்பாகி
வளமான தோள்கொண்ட
பத்மநாபன் சக்கரம்போல்
ஒளிர்கின்ற மின்னலுடன்
அவன்சங்கு ஒலிபோல
ஒலிக்கின்ற இடிமுழங்கி
ஓயாமல் பகைவர்மேல்
சரமாக அம்பெய்யும்
சார்ங்கம் வில்போல
நிறைவாகப் பொழிந்திடுவாய்
நிலமெல்லாம் குளிர்வாக!
மார்கழியில் நீராடி
மகிழ்வோமே நாங்களுமே !

PSDPRASAD

5)

மாயனை மன்னு வடமதுரை மைந்தனை,
தூய பெருநீர் யமுனைத் துறைவனை,
ஆயர் குலத்தினில் தோன்றும் அணிவிளக்கை,
தாயைக் குடல்விளக்கம் செய்த தாமோதரனை,
தூயோம்ஆய் வந்துநாம் தூமலர் தூவித்தொழுது
வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்கப்
போய பிழையும் புகுதருவான் நின்றனவும்
தீயினில் தூசுஆகும் செப்பேலோ ரெம்பாவாய். (5)

மாயங்கள் செய்பவனை
 மதுராவில் பிறந்தவனை
தூயநீர் புரண்டோடும்
 யமுனாவின் கரையோரம்
விளையாடி மகிழ்ந்தவனை,
 ஆயர்குல மணிவிளக்கை
தனைஈன்ற தாய்வயிறு
 பெருமைபட வைத்தவனை
நீராடித் தூய்மையுடன்
 நறுமலரால் சேவிப்போம் !
பாராட்டி அவன்புகழை
 உளமாரப் பாடுவதால்
முன்செய்த பாவங்கள்,
 செய்கின்ற பாவங்கள்
எல்லாமும் தீயினிலே
 கலக்கின்ற தூசினைபோல்
இல்லாமல் ஆகிடுமே !
 இப்போதே தீர்ந்தேடுமே !

PSDPRASAD

# திருப்பாவை – பொருள் - எளிய தமிழ் கவிதை வடிவில்...

6)

புள்ளும் சிலம்பினகாண்; புள்ளரையன் கோயிலில்
வெள்ளை விளிசங்கின் பேரரவம் கேட்டிலையோ?
பிள்ளாய்! எழுந்திராய், பேய்முலை நஞ்சுண்டு,
கள்ளச் சகடம் கலக்கழியக் காலோச்சி,
வெள்ளத்தரவில் துயிலமர்ந்த வித்தினை,
உள்ளத்துக் கொண்டு முனிவர்களும் யோகிகளும்
மெள்ள எழுந்து அரியென்ற பேரரவம்
உள்ளம்புகுந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய். (6)

மோகனமாய் ஒலியெழுப்பி
பறவைகளும் கீச்சிடுதே !
வாகனமாய் கருடனெனக்
கொண்டவனின் கோயிலிலே...
வெண்சங்கும் ஒலிக்கிறதே !
வைகறையும் வந்ததென..
பெண்ணேநீ கேட்கலியோ?
பெருந்துயிலை நீக்கிடுவாய் !
சக்கரமாய் வந்தவனாம்
சகடனவன் வதமுடித்தான் !
"அக்கரையாய் பால்தருவேன்"
என்றவளின் உயிர்குடித்தான் !
பஞ்சுபோல பாம்பணையில்
பள்ளிகொண்ட கண்ணனுக்கு
நெஞ்சுருகி முனிவரெலாம்
"ஹரிநாமம்" சொல்கின்றார் !
உடனெழுந்து அதைக்கேட்டு
உள்ளம்குளிர் தோழியரே !

PSDPRASAD

கவியாக்கம்: ஸ்ரீதேவிபிரசாத்

7)

கீசுகீ சென்றெங்கும் ஆனைச்சாத் தன்கலந்து
பேசின பேச்சரவம் கேட்டிலையோ?
பேய்ப்பெண்ணே!
காசும் பிறப்பும் கலகலப்பக் கைபேர்த்து
வாச நறுங்குழல் ஆய்ச்சியர் மத்தினால்
ஓசை படுத்தத் தயிரரவம் கேட்டிலையோ?
நாயகப் பெண்பிள்ளாய்! நாராயணன் மூர்த்தி
கேசவனைப் பாடவும்நீ கேட்டே கிடத்தியோ?
தேசமுடையாய்! திறவேலோ ரெம்பாவாய். (7)

"கீசுகீசு" எனும்கீச்சான்
 குருவிஒலி கேட்கலையோ?
வாசம்மிகு கூந்தல்கொண்ட
 ஆயர்குல மங்கையர்கள்...
கழுத்தில்லுள்ள தாலியுடன்
 கைவளையும் குலுங்கிடவே
இழுத்துதயிர் கடைகின்ற
 சத்தமதும் கேட்கலியோ?
நாயகியாய் எங்களையே
 வழிநடத்தும் தோழியேநீ...
நாரணனாம் கண்ணன்புகழ்
 பாடுமெங்கள் இசைகேட்டும்
இன்னும்விழி திறவாமல்
 உறக்கத்தில் இருப்பாயோ?
மின்னுமொளி முகமுடையாய்
 பேதையளே ! கேட்பாயோ?
கண்விழித்து வாசல்வந்து
 கதவினையும் திறப்பாயோ?

PSDPRASAD

8)

கீழ்வானம் வெள்ளென்று, எருமை சிறுவீடு
மேய்வான் பரந்தனகாண்; மிக்குள்ள பிள்ளைகளும்
போவான் போகின்றாரைப் போகாமல்
காத்துன்னைக்
கூவுவான் வந்து நின்றோம், கோதுகலமுடைய
பாவாய்! எழுந்திராய்; பாடிப் பறைகொண்டு
மாவாய் பிளந்தானை, மல்லரை மாட்டிய
தேவாதி தேவனைச் சென்றுநாம் சேவித்தால்
ஆவாவென் றாராய்ந் தருளேலோ ரெம்பாவாய். (8)

அழகுமிகு தோழியளே !
ஆனந்தம் கொண்டவளே !
கிழக்குதிசை வெளுத்ததுவே !
விடியலதும் ஆனதுவே !
எருமைகளும் கன்றுகளும்
புல்வெளிக்கு வந்ததுவே !
அருமைஉயிர்த் தோழிகளும்
அவசரம்தான் செய்கின்றார் ..
உனக்காக பொறுத்துள்ளேன்
நீராட...எழுந்திடுவாய் !
கனைக்கின்ற குதிரைஉரு
கொண்டவனை வென்றானே !
மல்யுத்த வீரர்களை
மல்லாக்க சாய்த்தானே !
தேவாதி தேவனந்த
கண்ணனவன் புகழதனை
நாவார நாம்பாட
நெஞ்சார அருள்வானே !



PSDPRASAD

9)

தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கெரிய,
தூமங் கமழத் துயிலணைமேல் கண்வளரும்
மாமான் மகளே! மணிக்கதவம் தாள்திறவாய்;
மாமீர்! அவளை எழுப்பீரோ? உம்மகள்தான்
ஊமையோ? அன்றிச் செவிடோ அனந்தலோ?
ஏமப் பெருந்துயில் மந்திரப் பட்டாளோ?
‘மாமாயன், மாதவன், வைகுந்தன்’ என்றென்று
நாமம் பலவும் நவின்றேலோ ரெம்பாவாய். (9)

ஒளிர்கின்ற தீபமுடன்
 நறுமணமும் பரவிடவே
மிளிர்கின்ற ரத்தினம்சூழ்
 மாளிகையில் துயில்பவளே !
என்மாமன் மகளேநீ
 எழுந்துவந்து தாள்திறவாய் !
பெண்ணேநீ ஊமையளோ?
 செவிடான செவிஉனதோ?
மந்திரத்தில் விழுந்தாயோ?
 அழைப்பதெலாம் கேட்கலியோ?
"ஏன்மாமி? நீயேனும்
 எழுப்பிவிட மாட்டீரோ?"
நேயமுடன் நோன்பினையே
 நூற்றிடுவோம் வருவாயே !
"மாயவனே ! வைகுந்தா !
 மாதவனே" என்றெல்லாம்
வாயாரச் சொல்லிடவே...
 வந்திடுவாய் நீயெழுந்து...

PSDPRASAD

10)

நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய்!
மாற்றமும் தாராரோ வாசல் திறவாதார்?
நாற்றத் துழாய்முடி நாரா யணன்நம்மால்
போற்றப் பறைதரும் புண்ணியனால்
பண்டொருநாள்
கூற்றத்தின் வாய்வீழ்ந்த கும்ப கரணனும்
தோற்றம் உனக்கே பெருந்துயில்தான் தந்தானோ?
ஆற்ற அனந்தல் உடையாய்! அருங்கலமே!
தேற்றமாய் வந்து திறவேலா ரெம்பாவாய். (10)

"நாளாக நோன்பிருந்து
நான்சேர்வேன் சொர்க்கமெ"ன்றாய் !
தாளினைத்தான் திறக்கவில்லை !
வாய்திறக்க மாட்டாயோ?
மணக்கின்ற துளசியினை
முடியினிலே சூடியவன்
வணங்குகின்ற அனைவரையும்
காக்கின்ற புண்ணியனாம்...
நாரணனின் திருவடிவாம்
ஶ்ரீராமன் வதமுடித்த...
தீராமல் உறங்குகின்ற
கும்பகர்ணண் உறக்கமதை
மாறாமல் உன்னிடமே
முழுதாகத் தந்தானோ?
மயங்கியதோர் சோம்பலதன்
திலகமோ?எம் ! அணிகலனே !
உறங்கியது போதுமம்மா
உடனெழுந்து தாள்திறவாய் !

PSDPRASAD

11)

கற்றுக் கறவைக் கணங்கள் பலகறந்து,
செற்றார் திறலழியச் சென்று செருச்செய்யும்
குற்றமொன் றில்லாத கோவலர்தம்
பொற்கொடியே!
புற்றர வல்குல் புனமயிலே! போதராய்,
சுற்றத்துத் தோழிமார் எல்லாரும் வந்துநின்
முற்றம் புகுந்து முகில்வண்ணன் பேர்பாட,
சிற்றாதே பேசாதே செல்லப்பெண் டாட்டிநீ
எற்றுக் குறங்கும் பொருளேலோ ரெம்பாவாய். (11)

போரினிலே உயிர்கறந்து
பசுவிடமும் பால்கறக்கும்
வீரமிகு இடையர்குல
வடிவழகே ! பொற்கொடியே !
சீலமிகு தூயவளே !
சிறுகுறையும் அற்றவளே !
படமெடுக்கும் நாகத்தின்
கழுத்தினைபோல் மெல்லிடையாய்!
நடனமிடும் கானகத்து
மயிலினைப்போல் ஒயிலுடையாய் !
சுற்றியுள்ள தோழியர்கள்
சேர்ந்தேஉன் வீட்டிலுள்ள
முற்றத்திலே கூடிநின்று...
முகுந்தன்பேர் சொல்கின்றோம் !
சற்றும்வாய் திறவாமல்
செல்வமேநீ உறங்குகிறாய் !
என்னபயன் ஆகிடுமோ?
துயிலிதனால் சொல்லிடுவாய் !



PSDPRASAD

12)

கனைத்திளங் கற்றெருமை கன்றுக் கிரங்கி
நினைத்து முலைவழியே நின்றுபால் சோர
நனைத்தில்லம் சேறாக்கும் நற்செல்வன் தங்காய்!
பனித்தலை வீழநின் வாசல் கடைபற்றிச்
சினத்தினால் தென்னிலங்கைக் கோமானைச்
செற்ற
மனத்துக் கினியானைப் பாடவும்நீ வாய்திறவாய்!
இனித்தான் எழுந்திராய்; ஈதென்ன பேருறக்கம்?
அனைத்தில்லத் தாரும் அறிந்தேலோ ரெம்பாவாய்.
(12)

பசித்திருக்கும் கன்றென்னும்
கவலையிலே எருமைகளும்
கசிந்தொழுகும் பால்தானாய்
தெருவெல்லாம் சேறாக...!
அப்படியோர் செல்வமிகு
ஆயர்குல செல்வியளே !
இப்படிநீ தூங்குவாயோ?
ஊரெல்லாம் பார்க்கிறதே !
ராவணனை வதமுடிக்க
ராமனாக அவதரித்த
நாரணனின் நாமமதை
நாங்களெல்லாம் சொல்கின்றோம்!
பனித்துளிகள் தலைமேலே
பால்சேறாய் தரைமேலே !
குளிரினிலே நிற்கின்றோம் !
குமரியளே ! பாராயோ?
விழித்தெழுந்து சீக்கிரமாய்
வந்திடுவாய் எம்முடனே !

PSDPRASAD

13)

புள்ளின்வாய் கீண்டானை, பொல்லா அரக்கனைக்
கிள்ளிக் களைந்தானைக் கீர்த்திமை பாடிப்போய்,
பிள்ளைகள் எல்லாரும் பாவைக் களம்புக்கார்;
வெள்ளி எழுந்து, வியாழம் உறங்கிற்று;
புள்ளும் சிலம்பினகாண்; போதரிக் கண்ணினாய்!
குள்ளக் குளிரக் குடைந்து நீராடாதே,
பள்ளிக் கிடத்தியோ? பாவாய்! நீ நன்னாளால்
கள்ளம் தவிர்ந்து கலந்தேலோ ரெம்பாவாய். (13)

பறவைஉரு கொண்டுவந்த
பகாசுரன் வாய்பிளந்தான் !
பிறன்மனையை நாடியவன்
சிரமெடுத்து வெற்றிகொண்டான் !
புகழ்மிகு நாராணனின்
பெருமைகளைப் பாடியேநம்
அகம்மகிழ் தோழியர்கள்
நோன்பிருக்க செல்கின்றார் !
மறைந்ததம்மா வியாழனுமே !
முளைத்ததம்மா வெள்ளியுமே !
மலர்ந்தவிழி கொண்டவளே !
பறவைஒலி கேட்கிறதே !
குளிர்நீரில் நீந்தியேநீ
குளித்திடவும் வாராயோ?
ஒளிராகும் கண்ணனையே
நினைத்தாலே நன்னாளே !
ஒளிந்தேநீ உறங்குவதேன் ?
விழித்தெழுந்து வாரோயோ?

14)

உங்கள் புழைக்கடைத் தோட்டத்து வாவியுள்
செங்கழுநீர் வாய்நெகிழ்ந்து ஆம்பல்வாய் கூம்பின
காண்;
செங்கல் பொடிக்கூறை வெண்பல் தவத்தவர்,
தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போகின்றார்;
எங்களை முன்னம் எழுப்புவான் வாய்பேசும்
நங்காய்! எழுந்திராய், நாணாதாய்! நாவுடையாய்!
சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையன்
பங்கயக் கண்ணானைப் பாடேலோ ரெம்பாவாய்.
(14)

தோட்டத்தில் செங்கழுநீர்
மொட்டுக்கள் மலர்ந்தனவே !
வாட்டமின்றி ஆம்பல்மலர்
சாய்ந்ததுவே விடியலிலே!
காவிஉடை துறவியர்கள்
தூயவெள்ளை பற்களுடன்
கோவிலுக்கு செல்கின்றார் !
திருச்சங்கம் ஊதிடவே !
சங்குடனே சக்கரமும்
கரத்தினிலே ஏந்துபவன் !
மங்கலமாய் தாமரைப்பூ
மணிவிழியில் மின்னுபவன்!
கண்ணன்புகழ் பாடிடாது
கண்ணுறங்கிக் கிடக்கின்றாய்!
முன்னம் வந்து எம்மையெல்லாம்
எழுப்பிடுவேன் என்றாயே!
இன்னுமெழ வில்லையேநீ?
நாணப்பட வில்லையோநீ !

PSDPRASAD

15)

எல்லே இளங்கிளியே! இன்னம் உறங்குதியோ?
சில்லென் றழையேன்மின், நங்கைமீர்!
போதர்கின்றேன்;
'வல்லை, உன் கட்டுரைகள்! பண்டேஉன்
வாயறிதும்!'
'வல்லீர்கள் நீங்களே, நானேதான் ஆயிடுக!'
'ஒல்லைநீ போதாய், உனக்கென்ன வேறுடையை?'
'எல்லோரும் போந்தாரோ?' 'போந்தார், போந்து
எண்ணிக்கொள்'
வல்லானை கொன்றானை, மாற்றாரை மாற்றழிக்க
வல்லானை, மாயனைப் பாடேலோ ரெம்பாவாய்.

"அடியே !எம் இளங்கிளியே !
இன்னுமாநீ உறங்குகிறாய்?"
"கடிதான சொல்கொண்டு
அழைக்காதீர் வருகின்றேன்!"
"மணிக்கணக்கில் உனக்காகக்
காத்திருந்தோம் எங்களையே
பணிவாகப் பேசிடவே
பணிப்பதுவும் முறையாமோ?"
"வல்லோர்கள் நீங்களெல்லாம்
வாய்ச்சொல்லில் நானில்லை...
எல்லோரும் வந்தாரோ?
நான்மட்டும் தாமதமோ?"
"எல்லோரும் வந்தாரே !
எண்ணிக்கொள் நீயாக !
பொல்லாத பலம்கொண்ட
பெரும்யானை அழித்தவனாம் !
அல்லாரை வதமுடிக்கும்
கண்ணனைநீ வணங்கிடவா !



PSDPRASAD

16 )

நாயக னாய்நின்ற நந்தகோபனுடைய
கோயில்காப் பானே! கொடித்தோன்றும் தோரண
வாயில்காப் பானே! மணிக்கதவம் தாள்திறவாய்;
ஆயர்சிறுமிய ரோமுக்கு அறைபறை
மாயன் மணிவண்ணன் நென்னலே
வாய்நேர்ந்தான்;
தூயோமாய் வந்தோம் துயிலெழப் பாடுவான்;
வாயால் முன்னமுன்னம் மாற்றாதே அம்மா! நீ
நேய நிலைக்கதவம் நீக்கேலோ ரெம்பாவாய். (16)

எம்தலைவன் நந்தகோபன்
எழிலான மாளிகையின்
சிங்கார வாசலினை
சிறப்பாகக் காப்பவரே !
ஆயர்குல சிறுமியர்நாம் !
தாள்திறவாய் எமக்காக !
மாயவனாம், கருநிறத்து
மணிவண்ணன் எங்களுக்கு
"பறை தருவேன்" எனநேற்றே
உரைத்தானே அதைவாங்க
குறைவின்றி நீராடி
தூய்மையுடன் வந்தோமே !
பாட்டாலே துயிலெழுப்பி
பணிந்திடவும் செய்வோமே !
"மாட்டேன்நான்" எனமட்டும்
மறுக்காமல் எமக்காக
பூட்டிதனை திறப்பாயே !
உள்சென்று திரும்பிடுவோம் !

PSDPRASAD

17)

அம்பரமே, தண்ணீரே, சோறே அறஞ்செய்யும்
எம்பெருமான்! நந்தகோ பாலா! எழுந்திராய்;
கொம்பனார்க் கெல்லாம் கொழுந்தே! குலவிளக்கே!
எம்பெரு மாட்டி! யசோதாய்! அறிவுறாய்;
அம்பரம் ஊடறுத் தோங்கி உலகளந்த
உம்பர்கோ மானே! உறங்காது எழுந்திராய்;
செம்பொற் கழலடிச் செல்வா! பலதேவா!
உம்பியும் நீயும் உறங்கேலோ ரெம்பாவாய். (17)

உணவுடனே ஆடையுமே
குளிர்நீரும் தர்மமென
அளவின்றித் தருபவனே !
நந்தகோபா எழுந்திடுவீர் !
கொடிபோன்ற இடைகொண்ட
மங்கையரின் நாயகியே !
வடிகின்ற கருணைஉள
வடிவழகே ! யசோதா !
ஒளிர்கின்ற முகத்தவளே !
எழுந்திருக்க வேண்டுமம்மா !
விண்ணதனை கிழித்தேதன்
திருவடியால் உலகளந்த
கண்ணனே ! தேவர்களின்
கோமானே ! எழுந்தருள்வாய் !
செம்பொன்னால் சிலம்பணிந்த
பலராமா ! நீயும் உன்
தம்பியுமே எழுந்தெமக்கு
தரிசனமே தந்திடுவீர் !

PSDPRASAD

18)

உந்து மதகளிற்றன் ஓடாத தோள்வலியன்,
நந்தகோ பாலன் மருமகளே! நப்பின்னாய்!
கந்தம் கமழும் குழலீ! கடைதிறவாய்;
வந்தெங்கும் கோழி அழைத்தனகாண்; மாதவிப்
பந்தல்மேல் பல்கால் குயிலினங்கள் கூவினகாண்;
பந்தார் விரலி! உன் மைத்துனன் பேர்பாட,
செந்தா மரைக்கையால் சீரார் வளையொலிப்ப
வந்து திறவாய், மகிழ்ந்தேலோ ரெம்பாவாய். (18)

போரினிலே பின்வாங்கா
 தோள்வலிமை கொண்டவனாம் !
வீரியநீர் சுரக்கின்ற
 வாரணங்கள் கொண்டவனாம் !
நந்தகோபன் மருமகளே !
 நப்பின்னை பிராட்டியளே !
வந்துவாசல் தாள்திறவாய் !
 வாசனைப்பூங் குழலியளே !
குருக்கத்தி கொடிமீது
 குயில்பாடத் தொடங்கியதே !
ஒருகுரலில் கோழிகளும்
 ஒலிதருதே நாற்புறமும் !
மலர்ப்பந்து விரலினள் உன்
 மைத்துனரின் புகழ்பாடி
சிலிர்த்திடவே வந்தோமே !
 வளையல்களும் குலுங்கிடவே...
வாசலின்தாள் திறவாயோ?
 தாமரைப்பூ கையாலே...

19)

குத்து விளக்கெரியக் கோட்டுக்கால் கட்டில்மேல்
மெத்தென்ற பஞ்ச சயனத்தின் மேலேறிக்
கொத்தலர் பூங்குழல் நப்பின்னை கொங்கைமேல்
வைத்துக் கிடந்த மலர்மார்பா! வாய்திறவாய்;
மைத்தடங் கண்ணினாய்! நீ உன் மணாளனை
எத்தனை போதும் துயிலெழ ஒட்டாய்காண்,
எத்தனை யேலும் பிரிவாற்ற கில்லாயால்,
தத்துவம் அன்று தகவேலோ ரெம்பாவாய். (19)

தந்தத்தால் செய்ததொரு
கட்டிலிலே பஞ்சணையில்
சுந்தரமாய் பக்கத்தில்
ஒளிர்விட்டு விளக்கெரிய
கொத்துமலர் சூடியவள்
நப்பின்னை மார்பினிலே
பக்குவமாய் கிடப்பவனே !
மணிவண்ணா ! பேசிடுவாய் !
கரியநிற மைபூசும்
கண்களுடை நப்பினையே !
சிறியதொரு நொடியுமுன்
சுந்தரனைப் பிரியாமல்
மடியோடு சாயவிட்டு
எழுப்பாமல் இருக்கின்றாய் !
நொடிகூட கணவனைநீ
பிரிந்திடவே முடியாத
நிலைகொண்டாய் அது உனக்கு
அழகாமோ சொல்லிடுவாய் ?

20)

முப்பத்து மூவர் அமரர்க்கு முன்சென்று

கப்பம் தவிர்க்கும் கலியே! துயிலெழாய்;

செப்பம் உடையாய்! திறலுடையாய்! செற்றார்க்கு

வெப்பம் கொடுக்கும் விமலா! துயிலெழாய்;

செப்பன்ன மென்முலை செவ்வாய் சிறுமருங்குல்

நப்பின்னை நங்காய்! திருவே! துயிலெழாய்;

உக்கமும் தட்டொளியும் தந்துஉன் மணாளனை

இப்போதே எம்மை நீராட்டேலோ ரெம்பாவாய். (20)

முப்பத்து முக்கோடி
 தேவர்க்கும் முன்பாக
எப்போதும் பக்தர்கள்
 குறைதீர்க்கும் கலிதேவா !
பகைவர்க்கு பயமாகும்
 பேராற்றல் கொண்டவனே !
மிகையான தர்மநெறி
 வழிமேவும் தூயவனே !
துயிலெழுவாய் கண்ணாநீ !
 துயிலெழுவாய் இப்போதே !
பொற்கலசம் போல்பொங்கும்
 பெருமார்பும், செவ்வாயும்
சிற்றிடையும் கொண்டவளே !
 நப்பின்னை ! எழுந்திடுவாய் !
கண்ணாடி, விசிறியுடன்
 கண்ணனையும் எமக்கெனவே
இந்நேரம் அருள்மழையில்
 நீராட்ட வேண்டுமம்மா



PSDPRASAD

21)

ஏற்றகலங்கள் எதிர்பொங்கி மீதளிப்ப

மாற்றாதே பால்சொரியும் வள்ளல் பெரும்பசுக்கள்

ஆற்றப் படைத்தான் மகனே! அறிவுறாய்;

ஊற்றமுடையாய்! பெரியாய்! உலகினில்

தோற்றமாய் நின்ற சுடரே! துயிலெழாய்;

மாற்றார் உனக்கு வலிதொலைந்து உன்வாசற்கண்

ஆற்றாதுவந்து உன்னடிபணியு மாபோலே,

போற்றியாம் வந்தோம் புகழ்ந்தேலோ ரெம்பாவாய்.
(21)

எப்போது கறந்தாலும்
கலன்வழிய பால்கொடுக்க
தப்பாத பசுவினத்தை
கொண்டவனின் திருமகனே !
ஒப்பில்லா அறிவுடையோய் !
மணிவண்ணா ! எழுவாயே !
மறை போற்றும் பெரியவனே!
துயிலெழுவாய் இப்போதே !
குறைவில்லா ஒளிவீசும்
சுடரோனே ! துயிலெழுவாய் !
எதிர்த்துன்னை நின்றோர்கள்
திறன் தீர்ந்த பின்னாலே..
கிடப்பாரே வாசலிலே...
உன்பாதம் பணிந்திடவே !
உன்னடிகள் புகழதனை
பாடிடவே அதுபோலே
உன்வாசல் வந்தாமே..
கண்திறந்து பார்ப்பாயோ?.

22)

அங்கண் மாஞாலத் தரசர் அபிமான
பங்கமாய் வந்துநின் பள்ளிக்கட் டிற்கீழே
சங்கமிருப் பார்போல் வந்துதலைப் பெய்தோம்;
கிங்கிணி வாய்ச் செய்த தாமரைப் பூப்போலே,
செங்கண் சிறுச்சிறிதே எம்மேல் விழியாவோ?
திங்களும் ஆதித்தியனும் எழுந்தாற் போல்,
அங்கணி ரண்டும் கொண்டு எங்கள்மேல்
நோக்குதியேல்
எங்கள்மேல் சாபம் இழிந்தேலோ ரெம்பாவாய். (22)

"தன்னைவிட பெரியதொரு
 தீரன்யார்?" என்பவரும்..
மண்ணிதையே ஆள்கின்ற
 மன்னாதி மன்னர்களும்
பணிவுடனுன் தலைப்பக்கம்
 பக்தரென நிற்கின்றார் !
அணிவகுத்து நாங்களுமே
 அருகினிலே நிற்கின்றோம் !
கவர்கின்ற உன்னழகு
 கண்களினை மெதுவாக...
மலர்கின்ற தாமரைபோல்
 அசைகின்ற மணிவாய்போல்
திறந்திடவே மாட்டாயோ?
 சந்திரனும் சூரியனும்..
உதித்தெழுந்து ஒளிர்வதுபோல்
 உனதிரண்டு கண்பார்த்தால்
உதிர்ந்திங்கே நீங்குமேஎம்
 பாவமெல்லாம் இப்பொழுதே !

PSDPRASAD

23)

மாரிமலை முழைஞ்சில் மன்னிக் கிடந்துறங்கும்
சீரியசிங்கம் அறிவுற்றுத் தீவிழித்து,
வேரிமயிர் பொங்க எப்பாடும் பேர்ந்துதறி,
மூரிநிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டுப்,
போதருமா போலேநீ பூவைப்பூவண்ணா! உன்
கோயில்நின்றும் இங்ஙனே போந்தருளிக்
கோப்புடைய
சீரியசிங் காசனத்திருந்து யாம்வந்த
காரியம் ஆராய்ந் தருளேலோ ரெம்பாவாய். (23)

மழைக்காலம் மலைக்குகையில்
துயில்கின்ற சிங்கமது
விழித்தெழுந்து பிடரியினை
சிலிர்த்துநாற் புறம்திரிந்து
கம்பீர கர்ஜனையில்
கர்வமுடன் நடப்பதுபோல்
ஒய்யார மாகவேநீ
உடனெழுந்து வந்திடுவாய்!
காயாம்பூ நிறமுடைய
கண்ணாநீ வந்தருள்வாய் !
ஆயாச மாய்வந்து
அழகாக மிளிர்கின்ற
அரியா சனம்மீது
அமர்ந்தேஎம் கோரிக்கை
அறிந்திடுவாய் ! அதுகேட்டு
ஆய்ந்தொருநல் அருள்தன்னை
அளித்திடுவாய் ! அதற்கேநாம்
வந்தோமே ! மணிவண்ணா !

PSDPRASAD

24)

அன்று இவ்வுலகம் அளந்தாய்! அடிபோற்றி,
சென்றங்குத் தென்னிலங்கை செற்றாய்!
திறல்போற்றி,
பொன்றச் சகடம் உதைத்தாய்! புகழ்போற்றி,
கன்று குணிலா எறிந்தாய்! கழல்போற்றி,
குன்று குடையா எடுத்தாய்! குணம்போற்றி,
வென்று பகைகெடுக்கும் நின்கையில்
வேல்போற்றி,
என்றென்று உன்சேவகமே ஏத்திப் பறைகொள்வான்
இன்றுயாம் வந்தோம், இரங்கேலோ ரெம்பாவாய்.
(24)

வாமனனாய் இவ்வுலகை
அளந்தவனின் தாள்போற்றி !
ராவணனை இலங்கையிலே
வென்றவனின் திறன்போற்றி !
சக்கரமாய் வந்தவனை
ஜெயித்தவனின் புகழ்போற்றி !
உக்கிரமாய் வரும்பகையை
மாய்ப்பவனின் வேல்போற்றி !
கன்றாக வந்தவனை
குலைத்தவனின் கழல்போற்றி !
குன்றதனை குடையாகச்
செய்தவனின் குணம்போற்றி !
என்றுமுன் சேவையிலே
எப்போதும் நிலையாவோம் !
இன்றுந்தன் புகழ்பாடி
அருள்வேண்ட வந்தோமே !
மனமிரங்கி அருளிடுவாய் !
மணிவண்ணா ! வேண்டுகிறோம் !

PSDPRASAD

25)

ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஓரிரவில்
ஒருத்தி மகனாய் ஒளித்து வளர,
தரிக்கிலா னாகித் தான் தீங்கு நினைந்த
கருத்தைப் பிழைப்பித்துக் கஞ்சன் வயிற்றில்
நெருப்பென்ன நின்ற நெடுமாலே! உன்னை
அருத்தித்து வந்தோம்; பறைதருதி யாகில்
திருத்தக்க செல்வமும் சேவகமும் யாம்பாடி
வருத்தமுந் தீர்ந்து மகிழ்ந்தேலோ ரெம்பாவாய். (25)

பிறந்தாயே தேவகியின்
திருமகனாய் ஓரிரவில்..
சிறந்திடவே வளர்த்தாளே
யசோதை ஒளித்துன்னை !
அழித்திடவே நினைத்தானே
கம்சனவன் நினைப்பினையே
அழித்தாயே ! அவன்வயிற்றில்
அச்சமெனும் நெருப்பூட்டி!
உன்னருளைப் பெறவந்தோம் !
திருமாலே ! அருளிடுவாய் !
நின்னருளை நல்கினாலுன்
நற்குணங்கள் பாடிடுவோம் !
நின்செல்வ சிறப்புகளை
நெஞ்சார சொல்லிடுவோம் !
உன்பெருமை பாடுவதால்
துன்பங்கள் நீங்கிடயாம்
இன்பமுடன் மகிழ்வோமே !
அருள்செய்வாய் இப்போதே!

PSDPRASAD

26)

மாலே! மணிவண்ணா! மார்கழிநீ ராடுவான்
மேலையார் செய்வனகள் வேண்டுவன கேட்டியேல்
ஞாலத்தை யெல்லாம் நடுங்குமுரல்வன
பாலன்ன வண்ணத்துள் பாஞ்சசன்னியமே
போல்வன சங்கங்கள் போய்ப்பாடுடையனவே,
சாலப்பெரும் பறையே, பல்லாண் டிசைப்பாரே,
கோல விளக்கே, கொடியே, விதானமே,
ஆலின் இலையாய்! அருளேலோ ரெம்பாவாய். (26)

நீலவண்ண நிறத்தவனே!
ஆலிலையில் மிதப்பவனே !
காலகால மாகசெயும்
மார்கழியின் நோன்பிதற்கு
வேண்டியவை யாவையும்நீ
வழங்கிடவே வேண்டுகிறோம் !
பால்சாதம் போல்நிறமாம்..
புவிஅதிர ஒலிதருமாம
பாஞ்சசன்யம் எனும்சங்கு
போலசங்கு வகைகளுடன்
தேஞ்சுவையாய் பல்லாண்டு
பாடுகின்ற பெரியோரும்
பெருமுரசும், பூங்கொடியும்
மங்களமாய் தீபங்களும்
தருவாயோ? எங்களுக்கு
நோன்பதனை செய்திடவே !
பக்தரிடம் அன்புடையாய்
மணிவண்ணா அருளிடுவாய் !

PSDPRASAD

27)

கூடாரை வெல்லுஞ்சீர்க் கோவிந்தா! உன்தன்னை
பாடிப் பறைகொண்டு யாம்பெறும் சம்மானம்;
நாடு புகழும் பரிசினால் நன்றாக,
சூடகமே தோள்வளையே தோடே செவிப்பூவே
பாடகமே யென்றனைய பல்கலனும் யாம்
அணிவோம்;
ஆடை உடுப்போம்; அதன்பின்னே பாற்சோறு
மூடநெய் பெய்து முழங்கை வழிவார
கூடியிருந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய். (27)

தீயோரை வெல்கின்ற
 திறனான கோவிந்தா !
மாயோனே ! உனைப்பாடி
 அருள்பெறவே வந்தோமே !
அருளோடு பொருள்தந்து
 மகிழ்விப்பாய் எங்களையே!
பொருட்செல்வம் பெற்றால்தான்
 புகழ்ந்திடுமே இந்நாடு !
இருசெவியில் பூந்தோடு
 கரம்,காலில் அணிகலன்கள் !
தோளோடு வளையமுடன்
 புத்தாடை சூடிடுவோம் !
இன்பமுடன் விரதத்தை
 இனிதோடு முடித்திடவே
உன்னோடு சேர்ந்தேநாம்
 கையோடு நெய்வழிய
உண்போமே பால்சோறு !
 உள்ளங்கள் குளிர்ந்திடவே !

PSDPRASAD

28)

கறவைகள் பின்சென்று கானம் சேர்ந்துண்போம்;
அறிவொன்று மில்லாத ஆய்க்குலத்து உன்தன்மைப்
பிறவிப் பெறுந்தனைப் புண்ணியம் யாம்
உடையோம்;
குறைவொன்று மில்லாத கோவிந்தா!
உன்தன்னோடு
உறவேல் நமக்கு இங்கு ஒழிக்க ஒழியாது!
அறியாத பிள்ளைகளோம் அன்பினால்
உன்தன்னைச்
சிறுபேர ழைத்தனவும் சீறி யருளாதே,
இறைவா, நீ தாராய் பறையேலோ ரெம்பாவாய். (28)

மாடுகளை மேய்த்துவிட்டு
சோறுண்ணும் கூட்டம்யாம் !
வேறெதுவும் அறியாத
அறிவிலிகள் நாங்கள்தாம் !
இருப்பினுமே ஒன்றுமட்டும்
நிச்சயமாய் அறிவோமே !
பிறப்பிதனில் உந்தனையே
தலைவனென பெற்றதனால்
புண்ணியங்கள் பேரளவில்
பெற்றுள்ளோம் என்பதையே !
உன்னோடு யாம்கொண்ட
உறவென்றும் அழியாதே !
குறைவில்லா கோவிந்தா !
அறியாத பிள்ளைகள்யாம் !
பிழையாகக் கொள்ளாதே !
உரிமையுடன் நாம் உம்மை
ஒருமையிலே அழைப்பதெலாம் !
எம்நோன்பு ஏற்றருள்வாய் !

PSDPRASAD

கவியாக்கம்: ஸ்ரீதேவிபிரசாத்

29)

சிற்றம் சிறுகாலே வந்துன்னைச் சேவித்துன்
பொற்றா மரையடியே போற்றும் பொருள் கேளாய்;
பெற்றம் மேய்த்துண்ணும் குலத்திற் பிறந்து நீ
குற்றேவல் எங்களைக் கொள்ளாமல் போகாது;
இற்றைப் பறைகொள்வான் அன்று காண்
கோவிந்தா!
எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்தன்னோடு
உற்றோமே ஆவோம்; உனக்கே நா மாட்செய்வோம்;

அதிகாலை உந்தனிரு
பொற்பாதமலர் பணிந்து
துதித்திடவே வந்தோமே !
அதற்கான காரணம்கேள்!
ஆவினங்கள் மேய்க்கின்ற
ஆயர்குலம் தோன்றியநீ
மேவிடும் எம் சிறுநோன்பை
ஏற்காமல் இருக்காதே !
வேண்டிசில பொருள்பெறநாம்
விரதத்தைக் செயவில்லை!
வேண்டுமுனை சேவிக்கும்
பாக்யமது எங்களுக்கே !
பிறவிஏழு எடுத்தாலும்
பிறந்திடுவாய் எங்குலத்தில் !
உறவினராய் எமைவைப்பாய் !
இதுதவிர மற்றபடி
வினவியது யாவையும்நீ
மறந்திடுவாய் ! மணிவண்ணா !



PSDPRASAD

30)

வங்கக் கடல்கடைந்த மாதவனைக் கேசவனைத்
திங்கள் திருமுகத்துச் சேயிழையார்
சென்றிறைஞ்சி
அங்கப் பறைகொண்ட ஆற்றை, அணி புதுவைப்
பைங்கமலத் தண்தெரியல் பட்டர்பிரான் கோதை
சொன்ன
சங்கத் தமிழ்மாலை முப்பதும் தப்பாமே
இங்கிப் பரிசுரைப்பார், ஈரிரண்டு
மால்வரைத்தோள்
செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால்
எங்கும் திருவருள்பெற் றின்புறுவ ரெம்பாவாய். (30)

பாற்கடலைக் கடைந்தவனை
மாதவனை, கேசவனை
பால்நிலவு முகமுடைய
பெண்டியர்கள் தரிசித்து
பாவைநோன்பு பலன்பெற்ற
புண்ணியத்தை பாட்டாக
கோதைநான், மலர்முகத்து
பெரியாழ்வார் மகளாம்நான்
பைந்தமிழில் கோர்த்தேனே !
முப்பத்து மாலையென...!
தப்பாமல் இதைபடிப்போர்,
அழகியகண் திருமுகத்தான்...
ஒப்பில்லா தோள்வளத்தான்
செல்வத்தின் அதிபதியாம்
திருமாலின் ஆசியினால்
செல்வமெலாம் பெற்றிங்கு
ஒருகுறையும் இல்லாமல்
இன்பமுடன் வாழ்வாரே !



PSDPRASAD